# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் 06.08.2026

## முன்னிலை

### முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)

### மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 7618/SCIC/2025**

திருமதி.மோ.முனியம்மாள் - மேல்முறையீட்டாளர்
க/பெ.திரு.மோகன்
நடுவீதி, கல்லேரிப்பட்டி அஞ்சல்
ஏத்தாப்பூர் வழி - 636 117
சேலம் மாவட்டம்
Phone: 85088 19948.

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
மாவட்டப் பதிவாளர் (நிருவாகம்)
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
சேலம் (கிழக்கு) - 636 001.

## ஆணை

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **20.01.2025** |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 18.02.2025 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 17.03.2025 |
| 4. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 11.04.2025 |
| 5. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 09.05.2025 |
| 6. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 11.09.2025 |
| 7. | மனுதாரரின் ஆட்சேபனை மனு | 10.10.2025 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 20/01/2025 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்டப் பதிவாளர் அலுவலகம், சேலம் (கிழக்கு) அவர்களுக்கு அனுப்பி, அதில் “A” என்பவர் பெயரில் உள்ள நிலத்தை B என்பவர்

எவ்வித உரிமையும் இன்றி C என்பவருக்கு மொத்த நிலத்தில் ஒரு பகுதி மட்டும் பத்திரம் செய்கிறார். ஆனால் C என்பவர் அந்த நிலம் முழுவதையும் D,E,F,G,H-க்கு பத்திரம் செய்கிறார். C என்பவருக்கு பூர்விகம் அல்ல. இவ்வாறு பத்திரம் செய்வது "A" என்பவரை பாதிக்குமா ? பாதிக்காதா ? என்ற தகவல்" என்பன போன்று 3 (மூன்று) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (06/08/2026) ஆணையத்தின் காணொளி காட்சி வாயிலான விசாரணையின் போது மனுதாரர் திருமதி.மோ.முனியம்மாள், தனது மகள் திருமதி/செல்வி.கோகிலா என்பவருடன் சேலம் மாவட்ட ஆட்சியரகத்திலிருந்து ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில், திரு.வே.செந்தில்குமார், மாவட்டப் பதிவாளர் (நிருவாகம்), சேலம் (கிழக்கு) அவர்கள் ஆஜராகி, மனுதாரருக்கு ஏற்கனவே 11/09/2025 தேதியிட்டு தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். **ஆணையம் மேற்சொன்ன 11/09/2025 தேதியிட்ட தகவல்களை பரிசீலிக்கையில், அவை ஆவணங்களின்படியான உரிய தகவல் என பதிவு செய்து ஏற்கிறது. மனுதாரரின் மகள், தமக்குள்ள குறை தீர் கோரிக்கைகளை ஆணையத்திடம் விவரித்தார். இதற்கு, மனுதாரர் புகார் மனு / மனுவினை மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), மாவட்டப் பதிவாளர் அலுவலகம், சேலம் (கிழக்கு) அவர்களிடம் அளிக்க வேண்டுமென்று ஆணையம் அறிவுறுத்துவதோடு, பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), சேலம் (கிழக்கு) அவர்கள், மனுதாரரின் மனுவின் மீது உரிய காலவரையறைக்குள் விரைந்து நடவடிக்கை எடுப்பதோடு, அதன் விவரத்தை மனுதாரருக்கு அனுப்பி வைப்பதோடு, அதன் நகலினை ஆணையத்திற்கும் அனுப்பி வைக்க வேண்டுமென்று ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது. மேற்கண்ட உத்தரவுகளுடன் இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 7618/SCIC/2025</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்டப் பதிவாளர் (நிருவாகம்)
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
சேலம் (கிழக்கு) - 636 001.

**மேல்முறையீட்டாளர்**

திருமதி.மோ.முனியம்மாள்
க/பெ.திரு.மோகன்
நடுவீதி, கல்லேரிப்பட்டி அஞ்சல்
ஏத்தாப்பூர் வழி - 636 117
சேலம் மாவட்டம்
Phone: 85088 19948.

RG/Sr.PC